දුරකථන 2698475
தொலைபேசி 2698490
Telephone 2698507

ෆැක්ස් 2692913
பெக்ஸ் 2694860
Fax

විද්‍යුත් තැපෑල
மின்னஞ்சல் முகவரி ) postmaster@health.gov.lk
e-mail )

වෙබ් අඩවිය )
இணையத்தளம் ) www.health.gov.lk
website )

මගේ අංකය )
எனது இல ) NCD/72/2013
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி )
Date ) 2014/10/16

සුවසිරිපාය
சுவசிரிபாய
**SUWASIRIPAYA**

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
**Ministry of Health**

பொது சுற்றறிக்கை இல: 02-143/2014
மாகாண செயலாளர்கள்,
மாகாண / பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர்கள்,
மாகாண வைத்தியசாலை மருத்துவ அத்தியட்சகர்கள்,
நிறுவனத் தலைவர்கள்,

## தேசிய விஷத் தடுப்பு வாரம் - (2014 நவம்பர் 10 – நவம்பர் 16)

தேசிய விஷத்தடுப்பு, தேசிய நஞ்சியல் மற்றும் விஷத் தகவல் நிலையத்தினால் 2007 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்தம் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. அதனூடாக விஷத் தடுப்பு மற்றும் சிகிச்சைகள் தொடர்பில் பொது மக்களுக்கும், சுகாதார துறையுடன் சம்பந்தப்பட்ட சகலருக்கும் விழிப்பூட்டப்படுகிறது.

கடந்த சில வருடங்களில் தொற்றா நோய் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டவர்கள் மற்றும் மரணமடைந்தவர்களுள் எண்ணிக்கை தொற்று நோயால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையைவிட அதிகரித்து காணப்பட்டுள்ளது. தற்போதைய விஞ்ஞானபூர்வமான தரவுகளின்படி, சுற்றுப்புறச் சூழல் விஷத்தன்மை அடைவதன் ஊடாக தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கான போக்கு காணப்படுவது தெட்டத் தெளிவாகிறது. நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், பருத்த உடல், புற்று நோய் மற்றும் சிறுநீரக நோய்கள் என்பன தொற்றா நோய்களில் முக்கியமானவையாகும். சுகாதார அமைச்சின் மருத்துவ புள்ளிவிபரங்கள் பிரிவின் புள்ளிவிபரங்களின்படி, நீரிழிவு மற்றும் உயர்குருதி அமுக்கம் காரணமாக 2012 ஆம் ஆண்டில் வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டவர்களின் தொகை முறையே 78,225 மற்றும் 93,345 ஆக உள்ளதுடன் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை முறையே 675 உம் 268 உம் ஆக உள்ளன. இதுவரை வட மத்திய மாகாணத்தில் 22,000 சிறுநீரக நோயாளிகள் பதிவாகியுள்ளனர். சுற்றுப்புறச் சூழலுடன் சேரும் விவசாயத்திற்காகப் பயன்படுத்தும் இரசாயனங்கள் மற்றும் நவீன உணவு நுகர்வு பழக்கம் என்பவற்றின் ஊடாக மனித உடலுக்குள் தேங்கும் விஷமாகக் கூடிய இரசாயனங்கள் அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது. இந்தப் பின்னணியில் தொற்றா நோய்களை தடுப்பது தொடர்பாக சுற்றுப்புறச் சூழல் விஷத் தன்மைகள், மனித நடத்தை பாங்குகள் மற்றும் போஷாக்கு என்பவற்றிற்கிடையிலான தொடர்பினை சரியான இனங்காணுதல் மற்றும் நாளது வரைப்படுத்தப்பட்ட விஞ்ஞான பூர்வ தரவுகளை சரியாக பொதுமக்களுக்கு தெரியப்படுத்துவதும் மிகவும் இன்றியமையாததாகும். இந்த வருடமும் தேசிய விஷத்தடுப்பு வாரத்தினூடாக பொதுமக்களுக்கு மேற்கூறப்பட்ட விஞ்ஞானபூர்வமான தகவல்களை பொதுமக்களுக்கு அறியத்தருவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் இந்த வருடம் விஷத்தடுப்பு வாரத்தின் தொனிப்பொருளாக "சுற்றுப்புறச் சூழல் விஷங்களும் தொற்றா நோயும்" என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த சுற்றறிக்கை சிகிச்சை தொடர்பான தேவையான வசதிகளுடன் விழிப்புணர்வூட்டும் வசதிகளுடன் உள்ள சுகாதார சேவை நிறுவனங்களின் முறைமை மற்றும் விழிப்புணர்வுடைய மக்கள் உள்ள இலங்கையில் மேற்படி நோக்கத்தை அடையும் நோக்குடன் வெளியிடப்படுகிறது.

385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10, 385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10.
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10, Sri Lanka.

காலம்:- 2014 நவம்பர் 10 – 2014 நவம்பர் 16

தொனிப்பொருள்:- “ சுற்றுச் சூழல் விஷங்களும் தொற்றா நோய்களும்.

நோக்கங்கள்:-

உடலில் சேருகின்ற சுற்றாடல் தொடர்பான விஷம் , பொருட்களை குறைத்தல், தொற்றா நோய்களைக் குறைத்தல் மற்றும் அத்தகைய நோய்களால் ஏற்படும் மரணங்களில் நோயைக் குறைத்தல்.

1. தேசிய நஞ்சியல் மற்றும் விஷத் தரவுகள் நிலையத்தின் உபயோகத்தினைச் சகல தரப்பினருக்கும் தெளிவுபடுத்தல் மற்றும் மேற்படி நோக்கங்களை அடைவதற்கு அதிக பங்களிப்பினை செயற்திறன்மிக்கவகையில் எப்படிப் பெறுதல் என்பது தொடர்பிலும் சகலதரப்பினருக்கும் தெளிவுபடுத்துதல்.
2. இதனைத் தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட சகலதரப்பினரையும் இணைத்து செயற்திட்டம் ஒன்றினை தயாரித்து அதனை நடைமுறைப்படுத்துதல்.
3. காலத்தின் முக்கிய தேவைப்பாடாகவுள்ள தொற்றா நோய்கள் தொடர்பான நாளானது வளமுகப்படுத்தப்பட்ட விஞ்ஞானபூர்வமான தகவல்கள் பற்றியும் , தொற்றா நோயினை எவ்வாறு குறைத்துக் கொள்வது என்பது பற்றியும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டுதல்.

விஷத் தடுப்பு வாரத்தினுள் செய்யப்படுவதற்காக முன்மொழியப்பட்ட செயற்பாடுகள்.

1. பதவியணியினரையும், சமூகத்தையும் விழிப்பூட்டும் வகையில் கல்வி தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் என்பவற்றை நிறுவனத்திற்குள்ளும் மற்றும் சமூகமட்டத்திலும் ஒழுங்கு செய்தல். உதாரணம்:- கல்வி தொடர்பான விரிவுரைகள், கண்காட்சிகள், நடை பயணங்கள் போன்றன.
2. நஞ்சியல் மற்றும் தேசிய விஷத்தரவுகள் நிலையத்தின் சேவையைப் பெறும் முகமாக பொது மக்களை தெளிவுபடுத்தி விழிப்புணர்வூட்டும் நோக்குடன் மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் பொருட்டு இலத்திரனியல் மற்றும் எழுத்து ஊடகங்களின் பிரதிநிதிகளுடன் இணைந்து அவர்களின் சேவையைப் பெறுதல் மற்றும் இந்நிலையத்தின் சேவையைப் பெறுவதற்கும் பொது மக்களை வழிப்படுத்தல்.
3. தேசிய நிலையத்தினால் நடைமுறைப் படுத்துவதற்கு முன் மொழியப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கு பற்றும் மற்றும் அனுசரணை வழங்கும் பல்வேறு பிரதிநிதிகளிடமிருந்து அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் பெறுதல்.
4. இந்த சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ளவாறு நாடளாவிய ரீதியில் முறையாக மக்களை விழிப்பூட்டும் வகையில் நிகழ்ச்சித்திட்டங்களை மற்றும் அறிவுறுத்தல்களை வழங்குதல், சுற்றாடலுக்கும் பொது மக்களின் சுகாதாரத்திற்கும் கேடான தீங்குகளைக் குறைத்தல்.

5. "தேசிய விஷத்தடுப்பு வாரம்" செயற்படுத்தப்படும் காலப்பகுதியில் ஏற்புடையதான அறிவித்தல் ஒன்றை பதவியணியினரை விழிப்பூட்டும் வகையில் நிறுவனத்தினுள் காட்சிப்படுத்துதல்.
6. வைத்தியசாலையில் கல்விக்கண்காட்சி, பயிற்சிப்பட்டறைகள், விரிவுரைகள் என்பவற்றை நடத்துதல்

இதன் பொருட்டு தேசிய விஷத்தடுப்பு வாரம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் விபரமான அறிக்கை ஒன்று சுகாதார கல்வி அலுவலர்களால் அச்செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர் பணிப்பாளர் / தொற்றா நோய்கள் பிரிவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆகக்குறைந்தது பொருத்தமான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றையாவது சுகாதார வைத்திய அதிகாரி, மாவட்ட வைத்திய அதிகாரி, பொது வைத்தியசாலை, போதனா வைத்தியசாலை மட்டங்களில் நடாத்தப்படல் வேண்டும். இந்த வேலைத்திட்டத்தை ஒழுங்கு செய்துள்ள கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தாபிக்கப்பட்டுள்ள தேசிய நஞ்சியல் மற்றும் விஷத்தரவுகள் நிலையத்திலிருந்து இது தொடர்பான மேலதிக விபரங்களையும், தொழில்நுட்ப விடயங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

தொலைபேசி இலக்கம் - 2686143 / 2691111 நீடிப்பு இலக்கம் - 2430

இச்சுற்றறிக்கையை சகல அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதற்கும், இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் செயற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துமாறும் நீர் நீர் வேண்டப்படுகின்றீர்.

சம்பந்தப்பட்ட உமது பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பற்றிய அறிக்கை டிசெம்பர் 28 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய நஞ்சியல் மற்றும் விஷத்தரவுகள் நிலையத்திற்கு அனுப்பப்பட வேண்டும். இந்த தொனிப் பொருளின் கீழ் தயாரிக்கப்பட்ட கோட்பாட்டு ரீதியான விடயங்கள், சிறுநூல்கள், சுவரொட்டிகள் என்பவற்றை தேசிய நஞ்சியல் மற்றும் விஷங்கள் நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். தேவைக்கேற்ப இது தொடர்பான விடயங்கள் உங்களுக்கு தபாலில் அனுப்பப்படும்.

வைத்தியர். பி.ஜி.மஹிபால
சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம்,
சுகாதார அமைச்சு.

Dr. P. G. Mahipala
Director General Health Service
Ministry of Health
385, "Suwasiripaya"
Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.